

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் வாயிலாக இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 3271 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் / காவல்துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.05.2023) தலைமைச் செயலகத்தில், அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு கமிட்டித் தலைவர் தா. ரகுபதி, பாலமேடு மடத்து கமிட்டி ஜல்லிக்கட்டு தலைவர் கி.பிரபு, எம்.ஆர்.எம்.பாலசுப்ரமணியம், ஜல்லிக்கட்டு பேரவை மாநிலத் தலைவர் பி.ராஜசேகர், வாடிப்பட்டி ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு கழகத் தலைவர் பிரபுபால் பாண்டி, அவனியாபுரம் ஜல்லிக்கட்டு விழாக் குழுவினர் கண்ணன், அழகாபுரி ஆ. புதுப்பட்டி ஜல்லிக்கட்டு விழாக் குழு தலைவர் பரந்தாமன், மதுரை மேலூர் தாலுகா சருகுவலையப்பட்டி கிராம விழாக் குழு நிர்வாகிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சி, திருப்பூர் மாவட்ட ஜல்லிக்கட்டு பேரவைகளின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழர்தம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தத் தடையில்லை என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பினை சட்டப் போராட்டம் நடத்தி பெற்று தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் ஏ.வெங்கடேசன், மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.

### எரிசக்தித் துறை சார்பில்

# ரூ.2003 கோடி செலவில் 16 புதிய துணை மின் நிலையங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மே 21-**

**எரிசக்தித் துறை சார்பில் ரூ.2003 கோடி செலவில் நிறுவப் பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலை யங்களை திறந்து வைத்து, 65 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிக ளின் செயல்பாட்டினை தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.05.2023) தலைமைச் செயல கத்தில், தமிழ்நாடு மின்தொடர மைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறு வப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களையும், 143 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 65 துணை மின் நிலையங்களில் 853 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்ப டுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்துறை, விவசாயம், வணி கம், தகவல் தொழில்நுட்ப மையங் கள், மெட்ரோ இரயில் திட்டங்கள், மின்சார வாகன மின்னூட்ட நிலை யங்கள் ஆகியவற்றினை கருத்திற் கொண்டு, வளர்ச்சிக்கு தேவை யான மின்சாரத்தை தடையில்லா மல் வழங்கிடவும், மேலும், காற்று மற்றும் சூரியசக்தி மூலம் பெறப்ப டும் பசுமை மின்சாரத்தை முழுமை யாக பயன்படுத்திடவும், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலை யங்களின் தரம் உயர்த்துதல், இயக் கத்தில் உள்ள துணை மின் நிலை யங்களில் புதிய விகிதாசார அறிமு கம் மற்றும் இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடு தல் திறனுள்ள மின் மாற்றிகள் நிறு வுதல் போன்ற பணிகளை தமிழ் நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### 16 துணை மின் நிலையங்களை திறந்து வைத்தல்

அந்த வகையில், சென்னை மாவட்டம் - புளியந்தோப்பில் புதிய 400 கி.வோ வளிமகாப்பு துணை மின் நிலையம் (Gas Insulated Substation) மற்றும் தூத்துக்குடி மாவட்டம் - ஒட்டப்பிடாரத்தில் புதிய 400 கி.வோ துணை மின் நிலை யம் என 1718 கோடியே 95 இலட் சம் ரூபாய் செலவில் நிறுவப் பட்டுள்ள இரண்டு புதிய 400 கி.வோ துணை மின் நிலையங்கள்;

அரியலூர் மாவட்டம் - நடுவ லூர்; செங்கல்பட்டு மாவட்டம் - படூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் - பெண்ணேஸ்வரமடம் (விகிதாசார அறிமுகம்); மதுரை மாவட்டம் -தனி யாமங்கலம் (விகிதாசார அறிமுகம்); நீலகிரி மாவட்டம் - மலர்பெட்டு; சேலம் மாவட்டம் - நத்தக்கரை மற் றும் திருவள்ளூர் மாவட்டம் - அர சூர் ஆகிய இடங்களில் 94 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறு வப்பட்ட ஏழு புதிய 110 கி.வோ துணை மின் நிலையங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் - புதுப் பாக்கம்; சென்னை மாவட்டம் - ஆழ்வார்திருநகர்; காஞ்சிபுரம் மாவட்டம் - மாத்தூர்; புதுக் கோட்டை மாவட்டம் - நகரப்பட்டி; திருவள்ளூர் மாவட்டம் - திருமலை வாசன் நகர் மற்றும் திருவாரூர் மாவட்டம் - அடியக்கமங்கலம், எட மேலையூர் ஆகிய இடங் களில் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செல வில் நிறுவப்பட்ட ஏழு புதிய 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறு வப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### 65 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட் டினை தொடங்கி வைத்தல்

செங்கல்பட்டு மாவட்டம் - இந்த ளூர், இல்லேடு, கடப்பேரி; கோயம் புத்தூர் மாவட்டம் - பவானி பேரேஜ், பட்டணம், ரேஸ் கோர்ஸ், காடுவெட் டிப்பாளையம்; கடலூர் மாவட்டம் - வெள்ளக்கரை; தர்மபுரி மாவட்டம் - பொம்மிடி; திண்டுக்கல் மாவட்டம் - பாப்பம்பட்டி, இலட்சுமணப்பட்டி, நத்தம்; ஈரோடு மாவட்டம் - டி.என். பாளையம், ந.மேட்டுப்பாளையம், காசிபாளையம், வெண்டிபாளை யம்; கள்ளக்குறிச்சி மாவட்டம் - மூங்கில்பாடி, ஆசனூர்; காஞ்சிபுரம் மாவட்டம் - பள்ளிக்கரணை, சிங்கா டிவாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட்; கரூர் மாவட்டம் - அய்யர்மலை, புலியூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் - குருபரப்பள்ளி, பாகலூர், காமன் தொட்டி, சூசூவாடி; மயிலாடுதுறை மாவட்டம் - மணல்மேடு, பாலை யூர்; நாமக்கல் மாவட்டம் - புதன் சந்தை, வளையப்பட்டி; புதுக்கோட்டை மாவட்டம் - கறம்பக் குடி, பாக்குடி, மலையூர், டி.நல்லூர்; இராமநாதபுரம் மாவட்டம் - கடலாடி; இராணிப்பேட்டை மாவட்டம் - புன்னை; சேலம் மாவட்டம் - மின் னம்பள்ளி; சிவகங்கை மாவட்டம் - இளையாங்குடி; தென்காசி மாவட் டம் - சங்கரன்கோவில்; தஞ்சாவூர் மாவட்டம் - மாரியம்மன்கோவில்; தேனி மாவட்டம் - வண்ணாத்திப் பாறை, மார்க்கையன்கோட்டை, தேவாரம்; திருவள்ளூர் மாவட்டம் - திருத்தணி, திருவள்ளூர், பட்டாபி ராம், கும்மிடிப்பூண்டி சிப்காட் - III, நொளம்பூர், தேர்வாய்கண்டிகை, மப்பேடு; திருவண்ணாமலை மாவட்டம் - கீழ்பென்னாத்தூர், சேத் துப்பட்டு, காஞ்சி; திருப்பூர் மாவட் டம் - பெரியார் நகர், நாரணபுரம், ஏரிப்பாளையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் - வையம்பட்டி; விழுப்பு ரம் மாவட்டம் - திண்டிவணம், மரக் காணம், தாயனூர், இளமங்கலம்; விருதுநகர் மாவட்டம் - வத்திராயி ருப்பு, முத்துராமலிங்கபுரம், அனுப் பங்குளம் ஆகிய இடங்களில் உள்ள 65 துணை மின் நிலையங்களில் 143 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 67 மின் மாற்றிகளின் திறனை கூடுதலாக 853 எம்.வி.ஏ உயர்த்தி, அவற்றின் செயல்பாட் டினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பா லாஜி, தொழில், முதலீட்டு ஊக்கு விப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, எரிசக் தித் துறை கூடுதல் தலைமைச் செய லாளர் ரமேஷ்சந்த் மீனா, தமிழ் நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு மின் தொடர மைப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.மணிவண்ணன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இயக்குநர் (பகிர்மானம்) மா.சிவலிங்கராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு இயல்-இசை-நாடக மன்றத் தலைவர் வாகை சந்திர சேகர் தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவர் என். கண்ணையா சந்தித்துப் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழ்நாட்டில் அதிகரித்து வரும்

# கோடை வெப்பத்தை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## பொதுமக்கள் கடைப்பிடித்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கையில் வலியுறுத்தல்!

**சென்னை, மே 21-**

**தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள அரசு தெரிவித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் கடைப்பிடித்திட வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் வேண்டுகோள் விடுத் துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் கடந்த சில நாட் களாக கோடை வெப்பம் அதிக ரித்து வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம் 19.5.2023 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ் நாட்டில் இயல்பு நிலையை விட 2 முதல் 3 டிகிரி கூடுதல் வெப்பம் பதி வாகியுள்ளதாக தெரிவித்துள்ளது. குறிப்பாக வேலூர் பகுதியில் 41.8 டிகிரி சென்டிகிரேடும், கரூர்பரமத்தி பகுதியில் 41.5 டிகிரி சென்டிகிரே டும் வெப்பம் பதிவாகியுள்ளது.

மேலும், அடுத்த இரண்டு நாட் களுக்கு இயல்பை விட 2 முதல் 3 டிகிரி கூடுதல் வெப்பம்நிலவக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் வெப்ப நிலை அதிகரித்து வரும் நிலையில், வரு வாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் துறை அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக 15.5.2023 அன்று செய்தி வெளியீடு மூலமாக பொதுமக்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும், அதிக ரித்து வரும் கோடை வெப்பத்தி னால் ஏற்படும் பாதிப்புகளை எதிர் கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கை கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித் தும் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் பல்துறை ஆய்வுக் கூட்டம் 17.05.2023 அன்று நடத்தப் பட்டது.

திறந்த இடங்களில் பணிபுரி யும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியா ளர்கள், வேளாண் தொழிலாளர் கள், கட்டுமானப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள் தங்களது பணியை காலை முன்கூட்டியே தொடங்கி, வெப்ப அலையின் தாக் கம் அதிகரிக்கும் முன்னர் முடித்தி டும் வகையில் உரிய ஏற்பாடு களை தொடர்புடைய துறையின் அலுவலர்கள் செய்வதுடன், இப்ப ணியாளர்களுக்கு போதுமான குடி நீர், ஓ.ஆர்.எஸ். இருப்பு, நிழற்கூ டங்கள் மற்றும் முதலுதவி வசதி செய்ய அறிவுரை வழங்கப்பட் டுள்ளது.

பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள், மருத்துவம னைகள், அரசு அலுவலகங்கள், சுற்றுலாத் தலங்கள், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட இடங்களில் போதுமான குடிநீர் வசதி, இளைப் பாறுவதற்கான நிழற்கூடங்கள் மற்றும் அவசர மருத்துவ வசதிக ளுக்கான ஏற்பாடுகளை உள் ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்க ளும் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் அமர்ந்து வேலை செய்யும் வசதி மற்றும் கூடுதல் வெப்பம் உற்பத்தி ஆகும் தொழிற்கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போதுமான ஓய்வு வழங்கவும், அவசர கால உதவிக்காக அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனை களுடன் ஆம்புலன்ஸ் வசதியுடன் கூடிய சேவைக்கான முன்னேற்பாடுகளை உறுதி செய்ய வும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு அரசு மருத் துவமனைகளில், போதுமான அளவு ஓ.ஆர்.எஸ். இருப்பு வைப் பதுடன், வெப்ப அலையின் தாக் கத்திற்கு உள்ளாகும் நபர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க தேவை யான மருந்து இருப்பு வைக்கவும், கால்நடைகளுக்கு தேவையான குடிநீர், நிழற்கூடங்கள், தீவனம் மற்றும் மருத்துவ வசதி செய்ய வும், அறிவுரை வழங்கப்பட் டுள்ளது.

பொதுமக்கள், வயது முதிர்ந்த வர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரை வெப்ப அலையின் தாக்கத்திலிருந்து பாது காக்க போதுமான விழிப்புணர்வை உருவாக்கும் வகையில், தொலைக்காட்சி, செய் தித்தாள், சமூக ஊடகங்கள், முகாம்கள், துண்டு பிரசுரங்கள், பதாகைகள் மூலமாக மாவட்ட ஆட்சியர்கள், தொடர்புடைய உள் ளாட்சி அமைப்புகள் மற்றும் அர சுத் துறைகள் நடவடிக்கை மேற் கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் அதிக ரித்து வரும் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட் டுள்ள முன்னேற்பாடு கள் மூலமா கவும் விழிப்புணர்வில் அரசு தெரி வித்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலமாகவும், பொதுமக்கள், திறந்த இடங்களில் பணிபுரிவோர், நீண்ட தூரம் சாலை பயணங் களை மேற்கொள்வோர் பாதுகாப் பாக இருக்குமாறு கேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கேட்டுக் கொண் டுள்ளார்.